**சுருக்கம்**

வேளாண்மை - உழவர் நலன் - வேளாண்மைப் பொறியியல் - வேளாண்மைப் பொறியியல் துறையின் வேளாண் இயந்திரங்களுக்கான தற்போதைய வாடகைக் கட்டணத்தை 15% உயர்த்தி புதிய வாடகை கட்டணம் நிர்ணயம் செய்வதற்கு தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), சென்னை அவர்களுக்கு அனுமதி வழங்கி - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை – உழவர் நலத் (வே.பொ.1) துறை**

அரசாணை (நிலை) எண்: 214

நாள்: 07.09.2022
சுபகிருது வருடம், ஆவணி 22
திருவள்ளுவர் ஆண்டு, 2053

படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண். 149, வேளாண்மை – உழவர் நலத் (வே.பொ.1) துறை, நாள் 21.10.2021
2. தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்களின் கடித எண். ட்டி1/23782/ 2020, நாள்- 02.03.2022, 25.04.2022 மற்றும் 03.08.2022.

........

**ஆணை :**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் வேளாண்மைப் பொறியியல் துறையைச் சார்ந்த வேளாண் இயந்திரங்களுக்கு ஒரு மணி நேரத்திற்கான வாடகைக் கட்டணத்தை, பின்வருமாறு நிர்ணயம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் முதல் தேதி வேளாண் இயந்திரங்களுக்கான வாடகையினை திருத்தி அமைத்திடவும் (முந்தைய வருடத்தின் வாடகைக் கட்டணத்தில் 15% உயர்வு) ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக, இவ்வாடகைத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் வருவாய் மற்றும் செலவினம் குறித்த விரிவான ஆய்வுடன் அரசிற்கு கருத்துரு அனுப்புமாறு தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| i) | டிராக்டர் (இணைப்புக் -கருவியுடன்) | ரூ.400/- |
| ii) | நெல் அறுவடை இயந்திரம் (டிராக் வகை) | ரூ.1,630/- |
| iii) | நெல் அறுவடை இயந்திரம் (சக்கர வகை) | ரூ.1,010/- |
| iv) | மண் தள்ளும் இயந்திரம் | ரூ.970/- |

த.பி.பா

| | | |
|---|---|---|
| v) | சக்கர வகை மண் அள்ளும் இயந்திரம் | ரூ.760/- |
| vi) | டிராக் வகை மண் அள்ளும் இயந்திரம் | ரூ.1,660/- |
| vii) | மினி டிராக்டர் | ரூ.400/- |
| viii) | கரும்பு அறுவடை செய்யும் இயந்திரம் இன்பீல்டர்களுடன் | ரூ.4,450/- |
| ix) | வாகனத்துடன் இயங்கக் கூடிய தேங்காய் பறிக்கும் இயந்திரம் | ரூ.650/- |

நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரத்திற்கான - வாடகை கட்டணம் டிராக்டருடைய இயக்கும் செலவை பொறுத்தது. நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரத்தின் பர்னருக்குத் தேவையான எரிபொருள் செலவு மற்றும் கூடுதல் வேலையாட்களுக்கான செலவு ஆகியன இவ்வியந்திரத்தை எடுத்துச் சென்று பயன்படுத்துகின்ற சம்பந்தப்பட்ட விவசாயிகள் அல்லது அரசு நிறுவனங்களைச் சார்ந்தது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்)-ன் கடிதத்தில் வேளாண்மைப் பொறியியல் துறையின் வேளாண் இயந்திரங்களுக்கான தற்போதைய வாடகைக் கட்டணத்தை 15% உயர்த்திடுமாறு அரசிற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

**வேளாண்மைப் பொறியியல் துறைக்குச் சொந்தமான வேளாண் இயந்திரங்களின் வாடகை விபரங்கள்:**

| வ. எண் | வேளாண் இயந்திரத்தின் பெயர் | நடப்பில் உள்ள வாடகை விபரம் (மணிக்கு) (ரூ.) | நடப்பில் உள்ள வாடகை + 15% உயர்த்தப்பட்ட தொகை (ரூ.) | வேளாண்மைப் பொறியியல் துறையால் பரிந்துரை செய்யப் படுகின்ற வாடகை (மணிக்கு) (ரூ.) |
|---|---|---|---|---|
| 1. | டிராக்டர் | 400 (இணைப்புக் கருவியுடன் சேர்த்து) | 460 (இணைப்புக் கருவியுடன் சேர்த்து) | 460 (இணைப்புக் கருவியுடன் சேர்த்து) |
| 2. | நெல் அறுவடை இயந்திரம் (டிராக் வகை) | 1630 | 1875 | 1880 |
| 3. | நெல் அறுவடை இயந்திரம் (சக்கர வகை) | 1010 | 1162 | 1160 |
| 4. | மண் தள்ளும் | 970 | 1116 | 1120 |

த.பி.பா

| | | | | |
|---|---|---|---|---|
| | இயந்திரம் | | | |
| 5. | சக்கர வகை மண் அள்ளும் இயந்திரம் | 760 | 874 | 870 |
| 6. | டிராக் வகை மண் அள்ளும் இயந்திரம் | 1660 | 1909 | 1910 |
| 7. | மினி டிராக்டர் | 400 | 460 | 460 |
| 8. | கரும்பு அறுவடை செய்யும் இயந்திரம் | 4450 | 5118 | 5120 |
| 9. | நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரம் | வாடகை கட்டணம் டிராக்டருடைய இயக்கும் செலவை பொறுத்தது. நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரத்தின் பர்னருக்குத் தேவையான எரிபொருள் செலவு மற்றும் கூடுதல் வேலையாட்களுக்கான செலவு ஆகியன இவ்வாகனத்தை வாடகைக்கு எடுத்துச் சென்று பயன்படுத்துகின்ற சம்பந்தப்பட்ட விவசாயிகள் அல்லது அரசு நிறுவனங்களைச் சார்ந்தது. | | |
| **புதிய வேளாண் இயந்திரத்திற்கான உத்தேசிக்கப்பட்ட வாடகை விபரம்** | | | | |
| 10. | வாகனத்துடன் இயங்கக் கூடிய தேங்காய் பறிக்கும் இயந்திரம் | 650 | - | 450 |

- டிராக்டரின் திருந்திய வாடகை நிர்ணயம் குறித்து தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) பின்வருவனவற்றை சமர்ப்பித்துள்ளார்.

I. உழவு முதல் அறுவடை வரை மற்றும் அறுவடைக்கு பிந்தைய செயல்பாடுகள் வரை பல்வேறு விவசாயப் பணிகளை மேற்கொள்வதற்கான இணைப்புக் கருவிகளை இயக்குவதற்கு டிராக்டர் பயன்படுகிறது. தமிழ்நாட்டில், பெரும்பாலான விவசாயிகள் உழவு, விதைத்தல், களையெடுத்தல், அறுவடை செய்தல், கதிரடித்தல் மற்றும் பயிர் கழிவு மேலாண்மை போன்ற பல்வேறு விவசாயப் பணிகளை மேற்கொள்ள தேவையான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வாங்குவதற்காக முதலீடு செய்திட சிறு, குறு விவசாயிகளால் இயலாத காரணத்தால், விவசாயிகளுக்கு அரசு வேளாண் இயந்திரங்களை குறைந்த வாடகைக் கட்டணத்தில் வழங்குகின்றது. டிராக்டருடன் பல்வேறு புதிய மற்றும் நவீன டிராக்டரால் இயக்கப்படும் கருவிகள் வேளாண்மைப் பொறியியல் துறை

மூலம் அரசால் நிர்ணயம் செய்யப்படுகின்ற குறைந்த வாடகைக்கு வழங்கப்படுகின்றன.

II. டிராக்டர்களை வாடகைக்கு விடும் தனியார் உரிமையாளர்கள் உழவுக்கு டிராக்டர்கள் அதிகமாக தேவைப்படுகின்ற சமயத்தில் வாடகைக் கட்டணங்களை அதிகளவு நிர்ணயம் செய்து விவசாயிகளிடம் வசூலிக்கின்றனர். இதனால் சிறு, குறு விவசாயிகள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே, டிராக்டருக்கான வாடகை கட்டணத்தை நடப்பில் உள்ள வாடகை கட்டணத்திலிருந்து, 25% உயர்த்தி ரூ.500/- என நிர்ணயம் செய்தால், விவசாயிகளுக்கு பெரும் உதவியாக இருக்கும் என தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3 தமிழகத்தின் பல்வேறு இடங்களில் நடந்த வாகனத்துடன் இயங்கக் கூடிய தேங்காய் பறிக்கும் இயந்திரத்தின் பயன்பாடுகள் குறித்த செயல் விளக்கங்களின் போது, தென்னை விவசாயிகள், பாரம்பரிய தென்னை மரமேறும் முறையில், தென்னை மரமேறும் வேலையாட்களுக்கு ஒரு மரமேறி தேங்காய் பறிப்பதற்கு ரூ.30 என்கிற வீதத்தில் கூலி வழங்கப்படுகிறது என்று தெரிவித்துள்ளனர். வாகனத்துடன் இயங்கக் கூடிய தேங்காய் பறிக்கும் இயந்திரத்தின் மூலம், ஒரு மணி நேரத்தில் 15 மரங்களிலிருந்து தேங்காய் பறிக்க இயலும். தற்போது, வேளாண்மைப் பெறியியல் துறையால் வாகனத்துடன் இயங்கக்கூடிய தேங்காய் பறிக்கும் இயந்திரத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு ரூ.650/- வாடகையாக வசூலிக்கப்படுகிறது. இது மரத்திற்கு ரூ.43/- ஆகும். இத்தொகை ஆட்களின் மூலம் தேங்காய் பறிப்பதைவிட அதிகமானதாகும். எனவே, தற்போதைய வாடகைக் கட்டணமான மணிக்கு ரூ.650/-ஐ மணிக்கு ரூ.450/- ஆக குறைப்பது மிகவும் அவசியமாகிறது. தென்னை மரமேறி வேலையாட்கள் மூலம் தேங்காய் பறிக்கும் முறையில், 15 மரங்களில் தேங்காய் பறிப்பதற்கு ரூ.450/- செலவாகும். இத்தொகை தற்போது வாடகையாக நிர்ணயிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இயந்திரமயமான தேங்காய் அறுவடைக்கு திறமையான வேலையாட்கள் தேவையில்லை என்பதைத் தவிர தென்னை மரமேறி வேலையாட்கள் தேங்காய் பறிக்கும் முறைக்கும், இயந்திரத்தின் மூலம் தேங்காய் அறுவடை செய்வதற்கும் இடையே வேறுபாடு எதுவும் இல்லை. எனவே, வாகனத்துடன் இயங்கக் கூடிய தேங்காய் பறிக்கும் இயந்திரத்திற்கான வாடகையினை குறைக்குமாறு தென்னை விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்றும் வாகனத்துடன் இயங்கக் கூடிய தேங்காய் பறிக்கும் இயந்திரத்திற்கான வாடகையை அடுத்த வருடம் வரை மணிக்கு ரூ.450/- என குறைத்து நிர்ணயம் செய்ய தலைமைப் பொறியாளர் (வே.பொ) கோரியுள்ளார்.

4. மேலும், 03.08.2022 நாளிட்ட தமது கடிதத்தில் தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்கள் வேளாண்மைப் பொறியியல் துறையில் விவசாயிகள் விவசாயம் செய்ய தேவைப்படும் இயந்திரங்களை குறைந்த வாடகைக்கு பெற இ.வாடகை என்னும் மொபைல் செயலி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாகவும், இச்செயலியின் மூலம் தேவைப்படும்

இயந்திரங்கள் முன்கூட்டியே முன்பதிவு செய்து ஆன்லைன் மூலம் வாடகை கட்டணத்தை செலுத்துவதற்கும் வசதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும், விவசாய இயந்திரங்களுக்கு 15 நாட்களுக்கு முன்னதாகவே வாடகை கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்.

5. எனவே, தலைமைப் பொறியாளர் (வே.பொ) அவர்கள் பின்வரும் தனது கருத்துருவிற்கு ஒப்புதல் வழங்குமாறு அரசினைக் கோரியுள்ளார்:-

i) வேளாண்மைப் பொறியியல் துறையைச் சார்ந்த வேளாண் இயந்திரங்களுக்கான, ஒரு மணி நேரத்திற்கான வாடகையினை 01.04.2022 முதல் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யலாம்:-

| | | |
|---|---|---|
| i) | டிராக்டர் (இணைப்புக் கருவியுடன்) | ரூ.460/- |
| ii) | நெல் அறுவடை இயந்திரம் (டிராக் வகை) | ரூ.1,880/- |
| iii) | நெல் அறுவடை இயந்திரம் (சக்கர வகை) | ரூ.1,160/- |
| iv) | மண் தள்ளும் இயந்திரம் | ரூ.1,120/- |
| v) | சக்கர வகை மண் அள்ளும் இயந்திரம் | ரூ.870/- |
| vi) | டிராக் வகை மண் அள்ளும் இயந்திரம் | ரூ.1,910/- |
| vii) | மினி டிராக்டர் | ரூ.460/- |
| viii) | கரும்பு அறுவடை செய்யும் இயந்திரம் இன்பீல்டர்களுடன் | ரூ.5,120/- |
| ix) | வாகனத்துடன் இயங்கக் கூடிய தேங்காய் பறிக்கும் இயந்திரம் | ரூ.450/- |

ii) வேளாண்மைப் பொறியியல் துறையின் டிராக்டருடன், நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரத்தினை, வாடகைக்கு விடுவதற்கு, டிராக்டருடைய இயக்கும் செலவை பொறுத்து, வாடகை கட்டணம் நிர்ணயம் செய்யலாம். நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரத்தின் பர்னருக்குத் தேவையான எரிபொருள் செலவு மற்றும் கூடுதல் வேலையாட்களுக்கான செலவு ஆகியன, எடுத்துச் சென்று இவ்வியந்திரத்தை பயன்படுத்துகின்ற சம்பந்தப்பட்ட விவசாயிகள் அல்லது அரசு நிறுவனங்களைச் சார்ந்ததாகும்.

iii) வேளாண் இயந்திரங்களுக்கான இயக்கும் மற்றும் பராமரிப்புச் செலவினை, முழுமையாக அடையும் வரை, ஒவ்வொரு வருடமும், ஏப்ரல் மாதம் முதல் தேதி முதல் வேளாண்மை இயந்திரங்களுக்கான வாடகைக் கட்டணத்தை திருத்தி அமைக்கலாம் (முந்தைய வருடத்தின் வாடகைக் கட்டணத்தில் 15% உயர்வு)

iv) திருத்தப்பட்ட வாடகைக் கட்டணங்களை இ.வாடகை மொபைல் செயலியில் பதிவேற்றம் செய்ய 15 நாட்கள் தேவைப்படுவதாகவும், அதனால் அரசாணை வெளியிடப்பட்டு 15 நாட்கள் கழித்து திருத்தப்பட்ட வாடகை கட்டணம் நடைமுறைப்படுத்தப்பட ஆணை வழங்குமாறு தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) கோரியுள்ளார்.

6. தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து

i. வேளாண் இயந்திரங்களுக்கான வாடகை கட்டணத்தை கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து, அரசு ஆணையிடுகிறது.

| வ. எண் | வேளாண்மை இயந்திரம் | (ஒரு மணி நேரத்திற்கு) வாடகை |
|---|---|---|
| i) | டிராக்டர் (இணைப்புக் கருவியுடன்) | ரூ.500/- |
| ii) | நெல் அறுவடை இயந்திரம் (டிராக் வகை) | ரூ.1,880/- |
| iii) | நெல் அறுவடை இயந்திரம் (சக்கர வகை) | ரூ.1,160/- |
| iv) | மண் தள்ளும் இயந்திரம் | ரூ.1,230/- |
| v) | சக்கர வகை மண் அள்ளும் இயந்திரம் | ரூ.890/- |
| vi) | டிராக் வகை மண் அள்ளும் இயந்திரம் | ரூ.1,910/- |
| vii) | மினி டிராக்டர் | ரூ.460/- |
| viii) | கரும்பு அறுவடை செய்யும் இயந்திரம் இன்பீல்டர்களுடன் | ரூ.5,120/- |
| ix) | வாகனத்துடன் இயங்கக் கூடிய தேங்காய் பறிக்கும் இயந்திரம் | ரூ.450/- |

ii. வேளாண்மைப் பொறியியல் துறையின் டிராக்டருடன், நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரத்தினை வாடகைக்கு விடுவதற்கு, டிராக்டருடைய இயக்கும் செலவை பொறுத்து வாடகை கட்டணம் நிர்ணயிக்க தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) -க்கு அரசு அனுமதி வழங்கி ஆணையிடுகிறது. நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரத்தின் பர்னருக்குத் தேவையான எரிபொருள் செலவு மற்றும் கூடுதல் வேலையாட்களுக்கான செலவு ஆகியன, இவ்வியந்திரத்தினை எடுத்துச் சென்று பயன்படுத்துகின்ற, சம்பந்தப்பட்ட விவசாயிகள் அல்லது அரசு நிறுவனங்களைச் சார்ந்ததாகும்.

iii. ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மாதம் முதல் தேதி முதல் வேளாண் இயந்திரங்களுக்கான வாடகையினை திருத்தி அமைத்திடுவதற்காக (முந்தைய வருடத்தின் வாடகைக் கட்டணத்தில் 15% உயர்வு), இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் வருவாய் மற்றும் செலவினம் குறித்த விரிவான ஆய்வுடன், அரசிற்கு ஒவ்வொரு ஆண்டும் கருத்துரு அனுப்பிட தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்)- அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

iv. இவ்வரசாணை, வெளியிடப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்கு பின்னர் செயல்முறைக்கு வருவதாகக் கொள்ளலாம்.

த.பி.பா

7. வேளாண் இயந்திரங்களுக்கான வாடகையாக விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்படும் தொகை பின்வரும் கணக்குத் தலைப்பில் வரவு வைக்கப்பட வேண்டும்.

> "0401-00-பயிர் வளர்ப்பு-120 டிராக்டர்கள் உட்பட வேளாண்மைக் கருவி – இயந்திர விற்பனை அவற்றை வாடகைக்கு விடுதல் பழுது பார்த்தல்-AB டிராக்டர் வாடகைக்கு விடும் திட்டம் - 231 வாடகை/ வாடகை கட்டணங்கள் / குத்தகை வரவுகள் 21 பொறிகள் மற்றும் கருவிகளுக்கான வாடகை"
> (0401-00-120- AB-23121)

8. இவ்வரசாணையானது நிதித் துறையின் ஒப்புதலை அதன் அ.சா. எண்.41296 /நிதி (வோளண்மை-உழவர் நலத் துறை)/2022, நாள் 29.08.2022 பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), சென்னை-35.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை-35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை – 18 (பெயரில்)
முதன்மை மாநிலக் கணக்காயர் (E & RSA) (G & SSA), சென்னை – 18.
இருப்பிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம், (சமுக தணிக்கை பிரிவு) சென்னை-9.
நகல்:
மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச்செயலகம், சென்னை – 9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் அவர்களின் தனிச்செயலாளர், வேளாண்மை- உழவர் நலத் துறை, தலைமைச்செயலகம், சென்னை – 9.
நிதி (வே (ம)உ_ந)/ (வசெ2)/ (வவ1) துறை, சென்னை – 9.
வேளாண்மை – உழவர் நலத் (அ.ந.மு.3) துறை, சென்னை – 9.
உதவி நிரலர், வேளாண்மை – உழவர் நலத்துறை, சென்னை- 9.
இருப்புக் கோப்பு/ உதிரி நகல்கள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர். 07.09.2022